
# அருள்மிகு நீலிவனேஸ்வரர் ஆலயம் திருப்பைஞ்ஞீலி

## ஸ்தல வரலாறு.



5

முதல் பதிப்பு ஆங்கீரஸ வருடம் சித்திரை திங்கள் 1-ம் தேதி
(13—4—92) வெளியீடு
1000ம் பிரதிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி

## ஜெ. ஜெயலலிதா அவர்கள்



## திரு. எஸ். ஆர். கருப்பண்ணன்

ஐ.ஏ.எஸ்

செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை

சென்னை

## திரு. வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்.

ஆணையாளர் இந்து சமய அறநிலையதுறை

சென்னை

## திரு. கு ந. அழகப்பன்

பி எஸ் சி பி டி பி எல்

துணை ஆணையர்

இந்து சமய அறநிலையத்துறை திருச்சி 6

## திரு. ப. சிவக்குமார் பிஎஸ்சி பிஎல்

உதவி ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை திருச்சி-2

**திரு. R. ராஜகோபால்,**
தக்கார்

**R. ராஜேந்தர்சிங்** பி எஸ்சி
செயல் அலுவலர் [கூ.பொ]

தலபுராணம் அச்சிட பொருளுதவி செய்தவர்

சிவ பக்தர் மண்ணச்சநல்லூர்

புத்தகம் தொகுத்தவர்,

N. சுந்தரேசன் பி.ஏ,

செயல் அலுவலர்

செந்தில் பிரிண்டர்ஸ் மண்ணச்சநல்லூர்

திருவிழாக்கள் :

சித்திரா பௌர்ணமியில் திருத்தேர். சித்திரை சதய நட்சத்திரத்தில் அப்பர் கட்டமுது விழா. புரட்டாசி மாதம் நவராத்திரியும் ஐப்பசி மாதம் சூரசம்ஹாரமும், ஆவணி மாதம் பிட்டுக்கு மண் சுமந்த திருவிழாவும், தைப்பூசத்தில் கொள்ளிடத்தில் தீர்த்தவாரியும் முக்கிய திருவிழாக்களாகும். தட்சணாயனத்தில் புரட்டாசி 6,7,8, உத்தராயணத்தில் பங்குனி 6, 7, 8, ஆகிய தேதிகளில் சூரிய பகவானின் பொற்கிரணங்கள் இப்பாதாள ஈஸ்வரரை தொழுதேத்தும். இதனை சூரிய பூஜை என்று பஞ்சாங்க நூலார் சிறப்பித்துச்செல்வார் இந்த பூஜையும் இங்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஆதி திருவெள்ளரை
அடுத்தது திருப்பைஞ்சீலி
சோதி திருவானைக்கோயில்
சொல்லிக் கட்டியது திருவரங்கம்

என்னும் பழமையான வழக்காறு இத்தலப்பெருமையை நன்கு உணர்த்துகிறது.

அண்ணல் திருத்தாண்டக வேந்தாயின மெய்யன் பருக்காய்
அருளும் தீர்த்தம்
உண்ண இம்மை நோய் அகலும் மறுமை நோய் மூழ்கினார்க்கங்(கு)
ஓடும் என்றார்
நண்ணாரும் சித்திரை சதயத்(து) அவன் எழச்செய்து அவ்வுரிமை
நடாத்தி அன்போடு
எண்ணாரும் நம் அப்பர் அடி இறைஞ்சுவோர் பெரும்பயன் இங்கு
இசைப்பார் யாரே.

## வேண்டுகோள்

இத்தலத் தேவாரத் திருப்பதிகங்களை தருமபுரம் திரு. P சுவாமிநாதன் அவர்களைக்கொண்டு ஒலி நாடாவில் பதிவு செய்து நித்தமும் புலவர்தல் முன்னும் அந்தி பொழுதிலும் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்ப ஏற்பாடு நடைபெறுகிறது தங்களால் இயன்ற பொருளுதவி செய்து திருவருள் பெறவேண்டுகிறோம்.

திருத்தேர் ஓடும் கீழவீதியைக் கடந்து முகப்பு மண்டப வாயில் வழியாகத் திருக்கோயிலை நோக்கி நடக்கின்றோம்.

அதோ, ஒரு குரங்கு எட்டிப் பார்க்கின்றதே. அதுதான் வசந்த மண்டபம். வசந்த மண்டபத்தில் வாசம் செய்கின்றவர். வசந்த விநாயகர். தெற்கிலிருந்து வீசும் காற்றைத் தென்றல் அல்லது வசந்தம் என்பர். வசந்தத்தில் திளைத்து நர்த்தனம் செய்து கொண்டுத் தெற்கே பார்க்க எழுந்தருளியிருப்பதற்கும் வசந்த மண்டபம் வசந்த விநாயகர் என்றெல்லாம் ஒரு சேர வழங்கப் பெறுவதற்கும் உள்ள இணைப்பொருமை நன்கினிது விளங்குகின்றது. இத்தலத்தில் பதினாறு விநாயகர்கள் இடம் பெற்றிருக்கின்றார்கள். திருக்கோயில் விளாகத்தில் ஒன்பதின்மர் ஐந்தாம் பிரகார எல்லைக்குள் எழுவர் இவரே, தல விநாயகர் ஆவர்.

ஒரு சமயம், வாயு பகவான் இங்கு தவம் செய்ய வந்த போது, இத்தல விநாயகரின் அனுமதி பெறவில்லை. தவறை உணர்ந்து சுக்கிர வார விரதத்தைக் கடைப்பிடித்து தவப் பயனைப் பெற்றான், வாயு பகவானின் தவத்தை, முன்பு பலிதமில்லாமல் போகும்படி செய்து பின்பு கூட்டுவித்ததால் எல்லாம்வல்ல சிவபெருமான் இவரை மகா பல விநாயகர் என்று அங்கீகாரம் செய்து விட்டார். சுக்கிர வார விரதத்தைக் கடைப் பிடித்தால் இவர் திருவருள் எளிதில் கிட்டும் என்பது இதி லிருந்து தெரிகிறது. தெரிந்து கொண்டால் போதுமா?

பிரம்மோற்சவத்தில் பந்தல்கால் முகூர்த்தம் உற்சவ மூர்த்திகள் புறப்பாடு எல்லாம் இம்மண்டபத்தில்தான் நடை பெறும்.

நிதிப்பெரு வனங்களும் நிகரில் கல்வியும்
கதிக்கு மெய்ஞ் ஞானமும் கதிக்கத் தந்திட
மதித்த பைஞ் ஞீலியின் வசந்த மண்டபத்
துதிக்கையா னிணையடி துதிக்கப் போற்றுவோம்''

என்பது தல விநாயகர் துதி.


வாழ்த்தி வணங்கிப் படியிறங்கிச் செல்லும்போது ஏனோ அண்ணாந்து பார்க்கின்றோம். அந்தக் குரங்கு நம்மிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்று காத்திருப்பது போலத் தோன்று கின்றது. கைவசம் உள்ள தேங்காய், பழத்தை அபகரித்துச் செல்லத் தயார் நிலையில் இருக்கின்றது என்று குழந்தைகளுக்குச் சொல்லலாம், "மனம் ஒரு குரங்கு'', ''மனம் போன போக் கெல்லாம் போக வேண்டாம்'' என்றிங்ஙனமெல்லாம் நாம் நினைத்துப் பார்க்கும் வகையில் சிற்பி இதனை இங்கு உருவாக்கி இருப்பதாகக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

இராஜகோபுரம்.

முற்றுப் பெறாத – கட்டி முடிக்காத இந்த இராஜ கோபுரம் சுந்தர பாண்டியனின் கைமுகூர்த்தம் ஆகும். எழுந்திருந்தால் ஏழு நிலைகளுடன் கம்பீரமாகக் காட்சி அளிக்கும். இக்கோபுர அடிவாரத்தின் கிழமேல் நீளம் எழுபதடி. தென்வடல் அகலம் நூறடி. திருவாயில் உயரம் முப்பது அடியாகும். நடை நடுவே இருபுறமும் இரண்டிரண்டு தூண்களைக் கொண்ட தா வரிசை விளிம்பில் காணப்படும் நாட்டியச் சிற்பங்கள் கலை நுணுக்கம் நிறைந்தவை ஆகும். உயரே தெற்கு மாடத்தில் இருக்கும் திருவுருவம் — — — — ? ஆகும் வடக்கு மாடத்தில் இருக்கும் திருவுருவம் — — — ? ஆகும் உயராத இக் கோபுரத்தில் துவார பாலகர்கள் உயர் நிலையில் இருக் கின்றார்கள்.

* * ‘மேல கொண்டான் உடையார் திருப்பைஞ்சீலி உடையார் கோயில் தானக்காரருக்கு கோயிலில் செய்கிறத் திருநிலை ஏழு கோபுரத் திருப்பணிக்கும் வடலாக வள்ளுவப் பாடி நாட்டில் ஆதனூர் நான்கெல்லை உட்பட்ட நன்செய் புன்செய்யும் குளமும் கரையும் பொதுவும் பெரகாதியும் உட்பட 31-வது முப்பத்தொன்றாவது கார்த்திகை மாத முதல் இறை யிலியாகத் தந்தோம். இந்நாள் முதல் கைக்கொண்டு நன்செய் புன்செயும் கமுகும் கொழுந்தும் கரும்பும் செங்கழு நீரும் உள்ளிட்டுத் தாம் வேண்டும் பயன் செய்து கொண்டு வஜாது வரை செல்லுக்காக கல்லிலும் செம்பிலும் வெட்டி நான்கெல்லையிலும் கல்வெட்டி நாட்டிக் கொண்டு அனுபவிக்கல்.''

அருள்மிகு நீலிவனேஸ்வரர்
ஆலயத்தில் பல்லாண்டு காலம்
தவமிருந்து சிவகதி அடைந்த
சூதக மகாமுனிவர் சமாதி.



❀ ❀ ❀ "நீலிவன அகவத்தி கோனேரினாம கொண்
ரன் உடையார் திருப்பைஞ்ஞீலி உடைய நாயனார் கோயில்
ானத்துக்கு கரிகால கன்ன வளநாட்டு மேலை வள்ளுவப்பாடி
ாட்டு பெரிய கள்ளிக்கொடி நான்கெல்லைக்குட்பட்ட நன்செய்,
ன்செய் நேர்நிலை மரம், ஊர்நத்தம் உள்பட இந்நாயனார்
காயில் திருநிலை ஏழு கோபுரத் திருப்பணிக்கும் பல திருப்பணிக்
நம் திருப்பணிப்புரமாக பொன் வரி காசு கடமை பெறுபவர் பல
பறு இல்லாஞ்ஞினை பேறு, தறியிறை செக்கிறை தட்டார்
ாட்டம், இடையர் வரி இன வரிகளும் புன்செய் நாட்டு வினி
யோகம் உட்பட்ட அனைத்தாயங்களும் வரியிலும் கழித்து
முப்பத்தாறாவது மார்கழி மாதம் முதல் இந்நாயனாருக்கு
முதலடங்க இறையிலியாகத் தந்தோம். இப்படிக்கு இவ்வோலைப்
படி பாடாகக் கொண்டு இப்படி வஜாரித்து செல்லும்படியாக
இவ்வூர் நான்கெல்லையும் திருச்சூல ஸ்தாபனமும் பன்னி
கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை ஒருடையான்
எழுத்து வாணாவாரிய்எனழுத்து யாண்டு 36 - நாள் 154.

தென் புறமும் வடபுறமும் இடம் பெற்றுள்ள இரு வேறு இரு கல் வெட்டுக்களும் திருநிலை ஏழு கோபுரத் திருப்பணிக்கு நிலங்கள் தானம் அளிக்கப்பட்ட செய்திகளைத் தெரிவிக்கின்றன.

See the South Indian inspections Volume IV, Nos 537-41 and Annual Report on South Indian Epigraphy as Nas 156-93 and Nos 214-19

மேற்சொன்ன கல்வெட்டுக்கள் நாற்பத்து ஒன்பதும் படி எடுக்கப்பெற்றது. டாக்டர் திரு. **இரா. கலைக்கோவன்** அவர்கள் கண்டுபிடித்தவை. (Radio talk on 14—1—90) தென் இந்திய கல்வெட்டுத் தொகுதியில் இடம்பெறாதவை ஆகும்.

இராஜ கோபுரத்திலிருந்து இரண்டாவது கோபுரத்தை நோக்கிச் செல்லும். வழியில் தென்புறம் உள்ளடங்கி இருக்கும். நந்தி சோறுடைய ஈஸ்வரர் வாகனமாகும். அந்நந்தி மண்டபத்துக்கு அருகில் கருங்கல் தூண்களில் கட்டமைப்புக்குள் பூந்தி மரம் ஒன்றிருக்கிறது. பல்லாண்டு காலம் இத்தலத்தில் தவம் செய்து சிவகதி அடைந்ததை சூத மகாமுனிவரின் தேவ சமாதி இது. நிணைந்து வணங்குங்கள்.

சோறுடை ஈஸ்வரர் திருக்கோயில்.

அப்பரை நினைத்தால் சோறுடை ஈஸ்வரர் நினைவும் சோறுடை ஈஸ்வரர் நினைத்தால் அப்பர் நினைவும் கூடவே ஓடி வரும்.

காவிரியின் வட கரையில் விளங்கும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் அறுபத்து மூன்று. இத்தலம் 62-ஆவது ஆகும். தென் கரையிலுள்ள திருச்சிராப்பள்ளி மலைக் கோயில், திருவானைக்கோயில் திருஎறும்பியூர், (திருவெறும்பூர்) திருக் கற்குடி (உய்யக்கொண்டான் மலை) திருப்பராய்த்துறை முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு அப்பர் பாத யாத்திரை யாக திருப்பைஞ்ஞீலிக்கு வந்து கொண்டிருந்தார். பருக்கைக் கற்கள் நிறைந்த பாதை சூரிய பகவானின் ஆதிக்கம் வேறு. பசியும், தாகமும் மேலிட நடை தளர்ந்து மெய் சோர்ந்து மிகவும் களைப்படைந்தார். மெய்யடியார் மெய்வருத்தம் தீர்க்க வழிவகை செய்யாமல் இறைவன் வாளா இருப்பரோ ; கட்டமு பொதி சோறு கைக்கொண்டு நிழல் தரும் சோலையையும். நீர் நிலையும் உண்டாக்கி அப்பரை எதிர்கொண்டார். ''நீவிர் இவ்வளவு தூரம் வருந்தி எங்கு செல்கிறீர்'? என்று அந்தணராய் வந்தவர் வினவ ''திருப்பைஞ்ஞீலி சிவபெருமானைத் தரிசிக்கச் செல் கின்றேன் '' என்று அப்பர் கூறினார். யாம் பைஞ்ஞீலிப் பெம் மானைப் பூஜிக்கும் அந்தணர் என்னிடம் கட்டுச் சாதம் இருக் கிறது. இதனை உண்டு தாகம் தீர்த்து இளைப்பாறிச் செல்க'' என்று கேட்டுக் கொண்டார். அங்ஙனமே வழி நடை வருத்தம் தீர்ந்ததும் அப்பரை அழைத்துக் கொண்டு திருக்கோயிலை வந்தடைந்தார். அவ்வளவில் அந்தணராய் வந்தவர் மறைந் தருளினார். சிவபெருமான் பார்வதி தேவியுடன் ரிஷப வாகன காட்சி கொடுத்தார். அப்பர் இறைவனின் பெருங் கருணைத் திறனை நினைந்து வியந்து மகிழ்ந்து பாடிப் போற்றினார்.

''சிவம் பெருக்கும் சித்திரை'' என்று சிறப்பித்துச் சொல் வார்கள். சித்திரை அவிட்டம் நம் சமய குரவரான அப்பர் பெரு மானின் திருநட்சத்திரம் ஆகும். பசிப்பிணி மருத்துவர் அமரர் மு. அருணாசல முதலியார் அவர்களின் அரும்பெரும் திருப்பணி யால் அப்பர் கட்டமுது நினைவாலயமும்: அப்பர் தீர்த்தமும் இத் திருக்கோயிலுக்குத் தென் மேற்கில் விளங்குகின்றன. கோவத் தங்குடி பண்ணையைச் சேர்ந்த திரு. H. தாண்டவராயப் பிள்ளை அவர்கள் ஆண்டுதோறும் அப்பர் திருநட்சத்திரத்தில் கட்டமுது விழாவை சிறப்பாக நடத்துகின்றார்கள்.

காசி விசுவநாதர் கோயில்

திருவீதியுலாவுக்குப் புறப்பட்டுச் சென்ற உற்சவ மூர்த்திகள் திருக்கோயிலுக்கு வந்தவுடன் திட்டி சுற்றும் சடங்கு நிகழும் இந்த நான்கு கால் மண்டபத்துக்கு வடபுறம் விமானம் இன்றி விளங்கும் காசி விசுவநாதர் கோயில் பிற்காலத்தைச் சேர்ந்தது ஆகும். துறையூர் ஜமீன்தார் கட்டியது. விசாலாட்சி உடனுறை விசுவநாதரைத் தரிசிப்போம், மூன்று கல்வெட்டுக்கள் இருக்கின்றன. கல்வெட்டுக்களில் சுட்டப்பெறும். நெல்வேலி சோழங்க நல்லூர் என்னும் இரு கிராமங்கள் இன்றும் பெயர் மாறாமல் இருக்கின்றன.

நூற்றுக்கால் மண்டபம் :

நடராஜப் பெருமாள் வெள்ளை சாத்தி தேவரடியார்கள் புடைசூழ இந்நூற்றுக்கால் மண்டபத்தில்தான் விசேஷ நாட்களில் எழுந்தருளுவது வழக்கம். தேவரடியார்கள் இல்லாததால் விசேஷ நாட்கள் வழிபாடு இம்மண்டபத்தில் நடைபெறுவதில்லை.

இராவணன் திருவாயில் கோபுரம்

இராமபிரான் தென் திசை இலங்கை நோக்கிச் செல்லுமுன் வசிட்ட முனிவரை சந்தித்து ஆசிபெற இத்தலத்துக்கு வந்தார். வசிட்டர் இத்தல மகிமைகளை இராமபிரானிடம் கூறினார். சீதாப்பிராட்டியைச் சிறை மீட்கவும் இராவணனை வெற்றி கொள்ளவும் இராமபிரான் வழிபட்டு இறையருள் பெற்றார்.

மூன்றாம் பிரகாரத்திலிருந்து மூன்று நிலை கோபுர தரிசனம் செய்து இராம நாமத்தை நினைத்துக் கொண்டு நீங்கள் முன்னுக்கு வருகின்றீர்களே. இந்தக் கோபுரத்துக்கு என்ன பெயர் தெரியுமா ? இராவணன் திருவாயில் கோபுரம் இராமபிரானை நினைத்தால் இராவணனை மறக்க முடியுமா ?

இக்கோபுர வாயிலில் ஒன்பது கல்வெட்டுக்கள் பொறிக்கப் படடுள்ளது. ஆனால் இராஜ கோபுர வாயிலில் எழுத்துக் கூட்டிப் படித்த அத்தகைய எழுத்தமைதி இங்கில்லை. கி. பி. 7-ஆம் நூற்றாண்டைக் சார்ந்தவை. எட்டு பிற்காலத்தியது ஒன்று.

எண்ணி ஒன்பது படிகள் இறங்கி வந்தீர்களா ? இவை நவக் கிரகப் படிகள் இராவணன் நவக்கிரகங்களைப் படிகளாக அமைத்து சிம்மாசனம் ஏறுவானாம், இப்படிகள் வழியாக இறங்கிச் சென் றால் நவக்கிரக தோஷம் நம்மைவிட்டு விலகிவிடும் தானே ?

நந்தி - பலிபீடம் - கொடி மரம்,

இக்கொடி மரம் — துவஜ ஸ்தம்பம் சின்னாண்டவராம் கர்ண பரம்பரைக் கதை-மரபு வழிச் செய்தி ஒன்றைத் தெரிந்து கொள்வோமா? ஒரு ஆடிப் பெருக்குக்கு அபிஷேகத்துக்கு கொள்ளிட தீர்த்தம் கொண்டுவர கோயில் பணியாளர்களும் உள்ளூர்வாசிகளும் சென்றார்கள். அப்போது ஆற்றில் இரண்டு பெட்டிகள் கிடைத்தன, அவற்றில் பத்துக்கும் மேற்பட்ட விக்கிரகங்களும், இட்டித்தடி, வேல்கள், வாட்கள் முதலிய ஆயுதங் களும் இருந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் ''கோயில் வீடு'' என்னும் தனி இடத்தில் வைத்து இன்றும் இவ்வூர் மக்கள் வழி பட்டு வருகின்றார்கள். இவை யாவும் ஊருக்குள் வந்ததும் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாம், உடுக்கை அடித்துக் கௌளி சகுனம் கேட்டார்கள். சின்னாண்டவரும், பெரியாண்டவரும் இத்திருக் கோயிலில் குடியேற உத்தேசித்துள்ளதாக பூசாரி மூலம் தகவல் கிடைத்தது. அத்தகவலின் அடிப்படையில் சின்னாண்டவரை சுவாமி கோயில் கொடி மரத்திலும், பெரியாண்டவரை அம்மன் கோயில் கொடி மரத்திலும் பதிவு செய்து விட்டார்களாம். உங்கள் மனதில் பதிகிறதா? சின்னாண்டவர், பெரியாண்டவர் அம்சமாக முறையே சுவாமி கோயில், அம்பாள் கோயில் கொடி மரங்கள் வழிபடப் பெறுகின்றன. சுற்று வட்டாரத்தில் மாடு, கன்று போட்டதும் இவ்விருவருக்கும் பாலாபிஷேகம் செய்துவிட்டுத்தான் பயன்படுத்துவார்கள்.

வேண்டுதலின் பேரில் அவ்வப்போது ஆட்டுக்கடா பலி கொடுப்பதும் தடை செய்ய இயலாமையால் தடையின்றி நடக் கின்றது. இத்திருக்கோயிலுக்குத் தென் கிழக்கில் சின்னாண்ட வருக்கும் தென் மேற்கில் பெரியாண்டவருக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பெற்ற திறந்த வெளிக் கோயில்கள் வேறு இருக்கின்றன, சிறு தெய்வ வழிபாடு பாடல் பெற்ற திருக்கோயிலில் நுழைந்து விட்டதைப்பற்றி மேலும் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

நவக்கிரகங்கள் :

நந்தி தேவருக்கு முன்பு அகல் விளக்கு அளவில் ஒன்பது குழிகள் உள்ளனவா? ஒன்பது குழிகள் நவக்கிரகங்களாக விளங்கு வதை வேறு எந்தத் திருக்கோயிலிலும் காண்பதற்கில்லை, இந் நவக்கிரகக் குழிகளில் நல்லெண்ணெய் தீபம் போட்டு வழிபடுவது

வழக்கம். நவக்கிரகத் தோஷப் பரிகாரத்துக்கு இத்தலம் தனிச் சிறப்புடையதாகும். அங்கே படிகளாக அமைந்திருக்கின்றார்கள். இங்கே விளக்குக்களாக விளங்குகின்றார்கள். எனவே நவக்கிரக சன்னதி இத்தலத்தில் கிடையாது

திருக்கார்த்திகை திருவாயில்

இதன் உச்சியில் திருக்கார்த்திகை நாளில் தீபம் ஏற்றி வைப்பார்கள். அதனால் திருக்கார்த்திகை திருவாயில் என்று பெயர். இவ்வாயிலின் இரு பக்கமும் தென் கைலாய வட கைலாய சன்னதிகள் இருக்கின்றன. அச்சன்னதிகளுக்கு இப்போது சிறப்பில்லை.

திருக்கார்த்திகை திருவாயில் துவார பாலகர் களிடம் நாம் அனுமதி பெற்று உள்ளே சென்று நந்தியம் பெருமானை வணங்கி நேரே மூலவரை மூல முதல்வரை - வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவரைத் தரிசிக்கின்ரேம்' நட்சத்திர விளக்குகளின் பிரதிபலிப்பும் பேரொளி எல்லா சிவ கலைகளும்இங்கு வந்து தங்கிச் சென்றிருக்கின்றன. அதைப்பற்றி அப்புறம் தெரிந்து கொள்வோம். இம்மூலவர் சுயம்பு இலிங்கம் - தான் - தோன்றி - உளி படாதவர் ஆகும். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது. கதலி வசந்தர் நீலிவனநாதர் பரமசம்பு ஆரணிய விடங்கர், சக்கரத் தியாகர், அதிகார வல்லவர் எழுதரிய பெருமாள் இப்படி இவர் பெயர் பலவாம். நீலிவனேஸ்வரர் என்னும் திருப்பெயரே நன்கு அறிமுகமானதாகும். பகா விஷ்ணு, இந்திரன், காமதேனு ஆதிசேஷன், வாயு பகவான், அக்கினி பகவான், இராமபிரான், அருச்சுனன், வசிட்டர், சூதமகாமுனிவர், சப்த ரிஷிகள், முசுகுந்த சோழன், கலியுகராம பாண்டியன், வியாக்கிரசூரன், சிவமித்திரன், பதுமகர்ப்பன், சுதர்மன், அங்கமித்திரன், என்று வழிபட்டுப் பேறு பெற்றோர் அனேகம்.

"மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்தும் பைஞ்ஞீலியெம்
அத்தனைத் தொழ வல்லவர் நல்லரே."

— திருநாவுக்கரசர்.

"மந்த மாமலர்க் கொன்றை வன்னியுங்
கங்கை யாளோடு திங்களும்
மொய்த்த வெண்டலை கொக்கி றகொடு
வெள்ளெ ருக்கமுஞ் சடையதாம்
பத்தர் சித்தர்கள் பாடி யாடும்பைஞ்
ஞீலியேனென்று நிற்றிரால்
அத்தி யீருரி போர்த்தீ ரோசொல்லு
மாரணிய விடங்கரே" — சுந்தரர்.

"தூயவன் றூய வெண்ணீ று மேனிமேற்
பாயவன் பாய பைஞ்ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
வேயவ னெனைச் செயுந் தன்மை யென் கொலோ"
— திருஞானசம்பந்தர்.

மூவர் தேவாரத்திலும் ஒவ்வொன்று ஓதிப் பிறவிப் பயன் பெறுவோம். இவர் மேல் திருசிரபுரம் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் "திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி" பாடி வைத்திருக்கிறார்,

இச்சன்னதியிலேயே இரத்தின சபை இருக்கிறது. தெற்கே பார்க்கவிளங்கும் இந்த அடிப்பீடம் நடராஜப்பெருமானின் திருவடி பதிந்ததாகும், மூலவருக்கு நடைபெறுவதைப் போலவே இவருக்கும் நான்கு கால பூஜை உண்டு. வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் சிவபெருமானின் நடன தரிசனம் காண திருக்கைலாயத்துக்குச் சென்றனர். "தில்லை வனமாகிய சிதம்பரம் செல்க, அங்கு நடன தரிசனம் தருவோம்." என்று தருவாய் மலலர்ந்தருளினார். சொன்ன வண்ணம் ஒரு தைப்பூசத்தில் கனக சபையில் நடன தரிசனம் செய்து காட்டினரர். இதைக் கேள்வியுற்ற வசிட்ட முனிவர் சிதம்பரம் சென்று "அந்த நடன தரிசனத்தை நான் என்று காண்பேனோ?" என்று இறைஞ்சினார். "நீலிவனமாகிய திருப்பைஞ்சீலியில் இன்னுமொரு தரம் நடனம் செய்வோம்" என சிவபெருமான் ஆற்றுப்படுத்தினார். அங்ஙனமே வசிட்டருக்காக நடன தரிசனம் தந்த இரத்தின சபை இது. ஆகவே, இத்தலம் மேச் சிதம்பரம் என்றும் பெயர் பெறும். இரத்தின சபாபதியின் திருவடி தொழுது திருவருள் பெறுவோம். இரத்தின சபாபதி மாலை என்னும் நூல் இவர் பேரில் பாடப் பெற்றதாகும். பாடியவர் பெயர் தெரியவில்லை,

இப்பிரகாரம் வலம் வரும்போது அர்த்த மண்டபச் சுவரைக் கவனியுங்கள், பதினைந்து துவாரங்கள் கொண்ட கருங்கல் பலகணி வழியாக மீண்டும் அந்தப் பலகணிக்கு எதிரே சுவரில் வசிட்ட முனிவரை வரைந்து வைத்திருக்கின்றார்கள். நாம் தெரிந்து கொள்ள வேண்டுமாம். தெரிந்துணர்ந்து பலகணி வழியாக மீண்டும் இரத்தின சபாபதியை ரகசியாகம வணங்குகிறோம் கருவரைச் சுவரிலும் அர்த்த மண்டபச் சுவரிலும் காணப்படும் கல்வெட்டுக்கள் கங்கைகொண்டமுதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதி இராஜன் போன்ற சோழ மன்னர்கள் செய்த தான தர்மங்களை வெளிப்படுத்துகின்றன.

கங்கைகொண்ட முதலாம் இராஜேந்திர சோழன் நாள் வழிபாட்டுக்காக ஆண்டொன்றுக்கு 64 கலம் நெல் வருமானத்துக்கு 150 பொற் காசுகளை நிரந்தர முதலீடு செய்திருக்கின்றான், இது போன்ற பல அரிய செய்திகளை இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

கருவறையின் தென்புறம் தெட்சிணாமூர்த்தி மேற்புறம் அர்த்தநாரிஸ்வரர் வடபுறம் பிட்சாடனர். கோஷ்ட தெய்வங்கள் இம்மூன்றேயாகும், தட்சிணாமூர்த்தியையும் மூலஸ்தான விநாயகரையும் வணங்கி முடித்து நேரே துர்க்கையிடம் வருகிறோம். மகிஷாசுரனை சம்ஹாரம் செய்த பாபத்தைப் போக்கிக் கொள்ள துர்க்கை இத்தலத்தில் தபசு செய்தால் சிவபெருமான் அருள் பாலித்தார். மதுரையில் மீனாட்சி அரசு புரிந்தது போல துர்க்கை இங்கு அரசு செலுத்தினாள், துர்க்கையாகிய நீலி தவம் செய்ததால், இத்தலத்துக்கு நீலிவனம் என்றும் சிவபெருமானுக்கு நீலிவனநாதர் என்றும் பெயர் வந்தது. இத்தலத்துக்கு மேற்கில் ஓடியதாகச் சொல்லப்பெறும் நீலிவன நதி இப்போது காணப்படவில்லல, ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமை இராகு காலத்தில் துர்க்கையை வழிபட நற்பலன்கள் பெருகும்,

சண்டிகேஸ்வரர் சன்னதிக்குச் சென்று சிவதரிசனம் செய்த பலனைப் பெற்றுக் கொண்டு பள்ளியறை பக்கம் வருகிறோம். பள்ளியறை சிவபெருமான் சன்னதியில் இருக்கலாமா? கூடாது கூடவே கூடபது. பள்ளியறை பூஜை நின்று ஆண்டு பல ஆயிற்று.

இரண்டாம் பிரகாரம்.

சுவாமி கோயில் சுற்றுச் சுவரில்தான் கல்வெட்டுக்கள் அதிகம் இப்பிரகாரம் முழுவதும் வாழைகள் வளர்ந்தோங்கி விளங்கிய காலம்ஒன்றுண்டு. அதனால் இதற்கு வாழைப்பரிகாரம் என்ற பெயரும் உண்டு. சப்த கன்னிகைகளை வழிபட்டு கஜலெட்சுமி

மண்டபத்தை அடைகிறோம், நாகாபரணம் பூண்டவர் 'சிவ பெருமான் அத்தகைய சிவபெருமானை ஐந்து தலை நாகங்களிலும் தேவகி மைந்தன் கண்ணனை மூன்று தலை நாகங்களிலும், இங்கே கண்டு களிக்கலாம்.

வள்ளி, தெய்வானையுடன் விளங்கும் ஆறுமுகப் பெருமானை வழிபட்டு சுவாமி கோயில் கோமுகிக்கு அப்பால் அங்குமிங்கும் நிலை பெற்றிருக்கும் தலவிருட்சத்தைத் தரிசிக்க வருகின்றோம். வாழையடி வாழையாக வந்த இத்தல விருட்சத்தின் பூர்வீக வரலாறு உங்களுக்குத் தெரியுமா? சிவபெருமான் தட்சிணா மூர்த்தியாக யோகத்தில் அமர்ந்தார். தானுமந்த சிவயோகத்தி லிருக்கக் கருதி பார்வதி தேவியான விமலை - விசாலை இங்கு வந்து தவம் மேற்கொண்டாள். நிழல் தரும் மரங்கள் இல்லாத தைக் கண்டு, பணிவிடை செய்ய வந்த தேவ கன்னிகளை வாழை மரங்களாகக் கடவீர்களென்று அனுக்கிரகம் செய்தாள், எனவே வாழை என்று அற்பமாய் எண்ண வேண்டாம். தேவ கன்னிகள் தேகமாம், வாழையைத் தல விருட்சமாகப் பெற்றிருக்கும் கோயில் வேறொன்று கிடையாது. வலம் வந்து வணங்குவோம். திருமணம் ஆகாதோர் இவ்வாழைக்குப் பரிகாரம் செய்ய விரைவில் திருமணம் கைகூடும். வெள்ளிமற்றும் ஞாயிற்றுக்கிழமை பரிகாரம் வெகுசிறப்பு மரத்திலேயே பழுத்த வாழைப் பழங்களை சுவாமிக்குப் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வதோடு சரி. மற்றபடி இதன் இலை, பூ, தண்டு, நார் எந்த வொன்றையும் பயன்படுத்துவதில்லை. நீலி - வாழை - பைஞ்ஞீலி - பசுமையான வாழை திரு - அடைமொழி, திருப்பைஞ்ஞீலி என்று பெயர் வர இத்தல விருட்சமே மூல முதற்காரணம் ஆகும். விமலாரண்யம், கதலி வனம், நீலிவனம், தட்சின கைலாசம், மேலைச் சிதம்பரம் இப்படிப் பல பெயர்கள் இருந்தாலும் திருப்பைஞ்ஞீலி என்னும் இப்பெயரே. கல்வெட்டுக் களிலும், தேவாரம் பாடல்களிலும் காணக் கிடக்கின்றது. இத்தல விருட்சம் 64 - சதுர்யுகங்களைக் கண்டிருக்கிறது. 12,000 ஆண்டுகள் கொண்டது. ஒரு சதுர்யுகமாகும். பெருக்கிக் கொள்ளுங்கள். இவ்வாழை மரத்தின் புடைக் கன்றுகளைப் பெயர்த்தெடுத்து வைத்தால் அவை வளராது, வாழாது. உரமிடுதல் தண்ணீர் பாய்ச்சுதல், மருந்தடித்தல் ஆகிய அடிப்படை வசதிகள் உண்டா? இல்லை. ஆயினும் வாழ்வாங்கு வாழ்கின்றது.

# அருள்மிகு நீலிவனேஸ்வரர்
# ஸ்தல விருச்சகம் கல் வாழை.



Q23:38.24

நாம் விந[illegible] சன்னதிக்கு வந்து விட்டோம். நடு நாயகமாக [illegible]நாயகர் வீற்[illegible]கின்றார். வலது பக்கம் சிவலிங்கம். இடது [illegible]க்கம் செந்தா[illegible]க் கண்ணன். ஆயிரம் தாமரை மலர்களைக் [illegible]காண்டு, சிவபெருமானை அர்ச்சிக்கும்போது ஒரு மலர் குறைவு [illegible]ட்டது. மறைத்தருளினாரோவென்று குறைந்துபோன மலருக்[illegible]குப் பதிலாக மகாவிஷ்ணு தமது கண் மலரை அர்ப்பணித்து அர்ச்சனையை நிறைவேற்றி செந்தாமரைக் கண்ணான் என்று பெயர் பெற்றார். சிவபெருமான் சக்கராயுதம் வழங்கி ஈசான்ய பாகத்தில் - வட கிழக்கில் திருவெள்ளரை என்னும் தலத்தில் என்றைக்குமிருக்கும்படி அருள் செய்தார். இங்கிருந்து 5 கி. மீ. தூரத்தில் திருவெள்ளரை உள்ளது. காவிரியின் வட கரையில் இருக்கும் 26 வைஷ்ணவத் தலங்களில் திருவெள்ளரை 26-வது ஆகும், பெருமாள் திருநாமம்; புண்டரிகாக்ஷன் பிராட்டியார் திரு நாமம். பங்கயர்ச் செல்வி நாச்சியார் புண்டரீகம் என்றாலும், பங்கயம் என்றாலும் தாமரையைக் குறிக்கும். பெருமாள் பிராட்டியார் இருவரும் தாமரை நாமம் தாங்கி இருக்கின்றார்கள். இந்த தல வரலாற்றை காவிரியின் தென் கரையில் விளங்கும். திருவீழிமழலை தலத்தோடும் சம்பந்தப்படுத்திச் சொல்வார்கள்.

இத்தலத்தில் இரண்டு அம்மன் கோயில்கள் இருக்கின்றன. இருவர் பெயரும் விசாலாட்சிதான். நீள்நெடுங் கண்ணம்மாள் என்பது தமிழ்ப் பெயராகும், இதுதான் பழைய அம்மன் கோயில்.

இரண்டு அம்மன் கோயில்கள் இருப்பதால் இதை மேல் அம்மன் கோயில் என்றழைக்கிறார்கள். கொஞ்சம்போது பின்னமானதால் பழைய அம்மனை அப்புறப்படுத்தி, புதிய அம்மனைக் குடியமர்த்தி விட்டார்கள், இவ்விடத்தைப் பழைய அம்மனால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. அங்கபங்கமாக இருக்கும் மனைவி அங்கஹீனம் அடைந்தால் வேண்டாமென்று விலக்கி வைத்து விடுவோமா? அப்போது திருப்பணி செய்து கொண்டிருந்த துறையூர் ஜமீன்தார் கனவில் இக்கேள்வி இடம் பெற்றது. பழைய அம்மனுக்குப் புதியதோர் கோயில் எழுப்பப் பெற்றது நவ இராத்திரி நாட்களில் இந்த மேல் அம்மன் கோயிலில்தான் கொலு வைப்பார்கள். பார்வதி தேவியாகிய விசாலை தவம் செய்தபோது உண்டாக்கிய விசால தீர்த்தம் எதிரே இருக்கின்றது. இத்தீர்த்தம் மிக்க மகிமை வாய்ந்தது; [illegible] கலங்கினால்

220648

மக்கள் நிலை கலங்க வேண்டியதிருக்கும். வற்றினால் விளை பொருட்கள் உற்பத்தி குறையும். பாசி படர்ந்தால் நாட்டில் போர் உண்டாகும், இத்தீர்த்தத்தில் மச்சம் எந்தத்திசையில் உதிக்கின்றதோ அந்தத் திசைக்குப் பயமுண்டாகும். அரசு செய்பவர்களுக்கும் மரணமுண்டாகும், சுவாமிக்கு அபிஷேகம் செய்ய இத்தீர்த்தம் அவசியமானதாகும். முதலில் பிரசாத தீர்த்தம் போல உட் கொள்ளுங்கள். பிறகு தலையில் தெளித்துக் கொள்ளுங்கள் வலம் வந்து சண்டிகேஸ்வரியை வணங்கி முடிக்கிறோம். திருப் பைஞ்ஞீலி என்னும் பெயர், கல்வெட்டுக்களில் மங்காமல் தெரி கிறதா ?

இந்த மேல் அம்மன் கோயில் கொடி மரம் பெரியாண்டவர் அம்சம் என்பதை முன்பே தெரிந்து கொண்டோமல்லவா ?

இதுதான் துறையூர் ஜமீன்தார் கட்டிய கீழ் அம்மன் கோயில். சுற்றி வருவோம். கல்வெட்டுக்கள் பழமையானது. இடம் பெயர்ந்து வந்து இங்கே இடம் பெற்றிருக்கின்றன. யாகசாலை வாயிலுக்கு இப்பால் நில்லுங்கள். ஒரே சமயத்தில் நீள்நெடுங் கண்ணாரல்களைக் கும்பிடுங்கள் சிருங்கேரி மடத்தில் பூஜையில் வைத்து வழங்கப்பெற்ற பொன் தாடங்கங்கள் - காதணிகள் இவளைத் தேடி வந்த சொத்தாகும், அவளைக் காட்டிலும் இவள் மூர்த்திகரம் மிக்கவளாக இருக்கின்றாள்' மூத்தவள் அல்லவா ? நால்வரை வணங்கி நவக்கிரகப் படிகளேறிச் செல்லுமுன் மூல வரையும் பிராதன புராதன அம்பாளையும் ஒருசேர வணங்கு கின்றோம்.

மூன்றாம் பிரகாரம் :

முன்னொரு காலத்தில் வாயு பகவானுக்கும் ஆதிசேஷனுக் கும் தம்முள் யார் பெரியவர் என்று அகந்தை பிறந்தது. சிவ பெருமான் சோதனை செய்தார். ஆதிசேஷன் கைலாய மலையை சுற்றி வளைத்துக் கொண்டான். ஆதிசேஷன் மலையைத் தளர்த்த வாயு பகவான் சண்ட மாருதத்தை உண்டு பண்ணினர். சண்ட மாருதம் வீசியதால் கைலாய மலையிலிருந்து எட்டு கொடு முடிகள் பெயர்ந்து விழுந்தன. வாயு பகவானால் இடம் பெயர்ந்து விழுந்த சிகரங்களே திருகோணமலை திருக்காளத்தி, திருசிரா மலை, திருஈங்கோய் மலை, ரஜிதகிரி நிர்த்தகிரி, இரத்தினகிரி, சுவேதகிரி என்பனவாம். இவற்றுள் சுவேதகிரி என்பதே இத் திருப்பைஞ்ஞீலி திருத்தலமாகும். ஆகவே தான் இந்தலம் தென்

## ஏம தர்மனுக்கு உயிர் கொடுத்த
## அதிகார வல்லவர்



கைலாயம் என வழங்கப்படுகிறது. சோறுடை ஈஸ்வர கோயில் பாறை மேல் கட்டப்பெற்றிருப்பதைக் கண்டோம் இரண்டாம் பிரகாரத்தில் மதிற் சுவரில் பாறை குறுக்கிடுவதை பார்த்தோம். இப்போது பாறையில் செதுக்கப்பட்டிருக்கு சோமாஸ் கந்த மூர்த்தியைத் தரிசிக்க, பல்லவர் கால குடைவரை கோயிலுக்குச் செல்கின்றோம்,

பக்தன் மார்க்கண்டேயனின் பொருட்டு சிவபெருமான் திரு கடையூரில் எமதர்மனை சம்ஹாரம் செய்தார். எமதர்ம இறந்து பட்டதால் எவ்வுயிர்க்கும் சாவு இல்லாமற் போ விட்டது. பூமி தேவியால் பாரத்தை சுமக்க முடியவில்லை பூலோகம் தத்தளித்தது. கோயில்களில் சரிவர வழிபாடுகள் நடை பெறவில்லை. நால்வகை வருணத்தாரும் தத்தம் கருமங்களை மறந்தனர். இப்படிப் பல்வேறு பாதிப்புக்கள் நேர்ந்தன.

ஆனால், இத் திருப்பைஞ்ஞீலி தலத்தில் மட்டும் எந் வொரு பாதிப்புமின்றி எல்லாம் செவ்வனே நடைபெற்று கொண்டிருந்தது. ஆகவே, பூலோகத்திலிருக்கும் சிவகண களெல்லாம் இத்தலத்தை வந்தடைந்தன, மகாவிஷ்ணு பிரம்மா, இந்திரன், பூமிதேவி இங்ஙனம் எல்லோரும் எமதர் னுக்கு உயிர்ப்பிச்சைப் அளிக்க வேண்டி இறைவனிட முறையிட்டனர். எமதர்மனை பிலத் துவாரத்தின் வழியா வரவழைத்து முன் போலவே அழித்தல் தொழில் அதிகாரத்தை ஒரு தைப் பூசத்தில் வழங்கினார். இதனால் சுவாமிக்கு அதி கார வல்லவர். என்னும் பெயர் வந்தது. இழந்து போ அதிகாரத்தை, திரும்பப் பெறுவது என்றால் சாதாரணமா காரியமா ?

எமதர்மன் இறைவனின் வலது திருவடியில் அழுந்தி கிடக்கின்றான். பக்கத்தில் பார்வதிதேவி வீற்றிருக்கின்றா பெற்றோர்களுக்கு நடுவில் இளைய பிள்ளை ஸ்கந்தர். இந் சோமாஸ் கந்த மூர்த்தம் குணபரன் என்கிற மகேந்திரவரன்ம (கி. பி. 640) காலத்தைச் சேர்ந்தது என்று சொன்னா ஆராய்ச்சியாளர்கள் மறுக்கப் போகின்றார்களா ?

ஆக, இத்திருக்கோயில் கி. பி. 6-ஆம் நூற்றாண்டுக் முற்பட்டது என்பது உறுதியாகின்றது.

எம பயமா? உயிருக்கு ஆபத்தா? அபிஷேகம் எள் அன்னம் நிவேதனம், தானம் என்று பல்வேறு பரிகாரங்கள் செய்து நிவாரணம் பெறுகின்றார்கள்.

இந்த சோமாஸ்கந்த மூர்த்தத்தில் புலி வரிக் கோடுகள் எண்ணெய்க் காப்பில் நன்கு துலங்குகின்றதா? அதே போல, மதிற் கற்களிலும் காணக்கிடக்கின்றது. இப்புலி வரி கோடுகளுக்கு நீண்ட நெடிய புராணப் பின்னணி இருக்கிறது. வியாக்கிரபுரி என்னும்புலிவலத்திலிருந்து அரசாண்டவன். வியாக்கிர சூரன். வியாக்கிரம் என்றால் புலி. வியாக்கிர சூரன். புலி முகம் கொண்டவன். அவன் தம்பி வேங்கை முகமுடையான். வியாக்கிர சூரன் திருப்பைஞ்ஞீலி நாதரின் பரிபூரண அருள் பெற்றவன். தம்பி உடையான் படைக்கு அஞ்சுவானா? ஏனைய அரசர்களை அடிமைப்படுத்தி ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டினான். தேவேந்திரனே வியாக்கிர சூரனிடம் போரிட்டுத் தோற்றுபோனான். நிலைமை மிகவும் மோசமடைந்ததால் மகா விஷ்ணு தலையிட்டார். சுக்கிராச்சாரியராக மாறி,வியாக்கிர சூரன் அழிந்து போவதற்கு வஞ்சக உபாயம் சொல்லி, அப்புறம் விசுவரூபமெடுத்து வீழ்த்தினார். வியாக்கிர சூரன் திருப்பைஞ்ஞீலி நாதரின் திருவடிகளில் வந்து வீழ்ந்தான். ''இதுநாள்வரை உம்மைய்ப் பிரியாமலிருந்து வழிபட்டுப் பெற்ற பயனை வழி தவறிச் சென்று அழிவைத் தேடிக் கொண்டேன். எல்லாம் உம் தருவுள்ளம்'' என்று உய்திபெற வேண்டினான். அவன் நினைவாக இங்குள்ள கற்களில் புலிவரிக் கோடுகள் இடம் பெறுமாறு இறைவன் அனுக்கிரகம் செய்தார்.

புலிவலம், வேங்கை மண்டலம் என வழங்கும் இவ்வட்டத்திலுள்ள சிற்றூர்கள் இவ்வசுரர்களின் பெயரால் வழங்கப்படுகின்றன. சிவபக்தியில் சிறந்த வியாக்கிர சூரனை எதிர்த்துக் கொல்லாமல் உபாயமாய்க் கொன்றதால் மகாவிஷ்ணு கொலைப் பாவத்துக்கு ஆளானார், அந்த பாபத்தைப் போக்கிக் கொள்ள மணிகர்ணிகை தீர்த்தத்தில் நீராடிப் பரிசுத்தரானார். இத்திருக் கோயிலுக்கு வட கிழக்கில் மணிகர்னிகை தீர்த்தம் இருக்கிறது பாறையில் விளங்கும் அற்புதச் சுனையிது. காசி மணிகர்ணிகை தீர்த்தத்துக்குச் சமமானதாகும்.

எம தீர்த்தம் ;

எமதர்மனுக்கு அதிகாரம் வழங்கி "பிலத்துவாரம் வழியே நீ வந்த இவ்விடம் உன் பெயராலேயே எமதீர்த்தம் என்று வழங்கப் பெறும்" என்று சிவபெருமான் அருளினார். இத் தீர்த்தத்தை மரணப் படுக்கையில் அவதிப்படுபவர்களுக்குக் கொடுத்தால் வேதனையின்றி உயிர் பிரியும். இதில் நீராடுபவர்களுக்கு மரண பயமிராது,

கல்யாண தீர்த்தம் ;

இத்தீர்த்தம் வடக்குப் பிரகாரத்தில் உள்ளது. ஆதிசேஷனும் வாயு பகவானும் தம்முள் யார் பெரியவர் என்னும் தன்னிச்சையான போட்டிக்கு, சிவபெருமானின் உறைவிடமான கைலாயத்தைத் தேர்ந்தெடுத்தது முறை தவறிய செயல் அல்லவா? வாயுபகவான் வருந்து மளவுக்கு கைலாயத்தைச் சுற்றி வளைத்த ஆதிசேஷன் செயல் சிவபெருமானுக்குச் தவறாகப் பட்டது. அத்தவறுக்குப் பரிகாரமாக தென் கைலாயமாகிய திருப்பைஞ்ஞீலிக்குச் சென்று தபசு செய்க என்று ஆதிசேஷனை நல்வழிப்படுத்தினார். ஆதிசேஷன் தாற்பிய மகரிஷி என்னும் பெயருடன் இங்கே தவம் செய்தபோது உண்டாக்கிய கல்யாண தீர்த்தம் இதுவேயாகும்.

தேவ குளம் :

திருத்தேர் ஓடும் வடக்கு வீதியில் இத்திருக்குளம் இருக்கிறது இத்திருக்குளத்திலிருந்து மேள வாத்தியங்கள் முழங்க சுவாமிக்கு அன்றாடம் அபிஷேக தீர்த்தம் எடுத்து வருவார்கள், தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாகவும் அபிஷேக தீர்த்தம் கொண்டு வரும் வடக்கு வாயில் அடைக்கப்பட்டதாலும் அது ஒரு பழங்கதையாகி விட்டது.

இப்படி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பும் பெற்ற இத்திருத்தலம் விரைவில் திருப்பணி கொள்ள இருக்கின்றது. விபரம் தெரிந்த அளவில் பழனி சிவம் என்ற அன்பரின் பெருமுயற்சியால் 1934-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அடுத்த கும்பாபிஷேகம் 27—8—1964 - இல் நடந்தேறியது.

ஆவணக்காப்பக

கோயில் அமைப்பு :

இத்திருக்கோயில் பஞ்ச பிரகாரங்களுடன் 23 ஏக்கர் 84 சென்ட் பரப்பளவில் இருந்தது. ஐந்தாம் பிரகாரம் மக்கள் குடியிருப்பாக மாறி விட்டது. அதனால் கோயில் ஊருக்கு மத்தியில் இருப்பது போலத் தோன்றுகின்றது. இப்போது 13 ஏக்கர் 02 சென்ட் போதுமென்று வருவாய்த் துறையினர் நிர்ணயித்து விட்டனர். தென் வடல் மதில் நீளம் சுமார் 300 அடி கிழமேல் மதில் நீளம் 560 அடி ஆகும்.

நிர்வாகமும் சொத்துக்களும் :

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத் துணை ஆணையர் அவர்களின் ஆளுகைக்குட்பட்டு நான்காம் நிலை நிர்வாக அதிகாரியால் இத்திருக்கோயில் நிர்வாகம் நடைபெறுகின்றது. 1192 அக்டோபர் 26-ஆம் தேதி துறையூர் ஜமீன்தார் அவர்களின் செப்புப் பட்டையப்படி இத்திருக்கோயிலுக்குத் தேவதாயம் விடப்பட்ட நிலங்கள் 5417 ஏக்கர் 53 சென்ட் ஆகும்.
எஸ்டேட் ஒழிப்ச் சட்டத்தின் கீழ் 26/1948 அரசாங்க ஆணை வருவாய்த் துறை எண் 2302 நாள் 1–9–1951 ன் படி இத்திருக் கோயில் நிலங்களின் பெரும்பகுதி அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்குப் பதிலாக ஆண்டுதோறும் ரூ 5361.30 தஸ்திக் தொகை தருகிறார்கள். திருக்கோயில் சிப்பந்திகளுக்கு 291 ஏக்கர் 89. செண்ட் நிலங்கள் மானியமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. குத்தகை நிலங்கள் சுமார் 225 ஏக்கர் இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 20,000 வருமானம் கிடைக்கின்றது. வானாவாரி புன்செய் நிலங்கள் தான். 3 ஏக்கர் 30 செண்ட் மட்டுமே நன்செய் நிலங்களாகும். ஞாயிறுதோறும் கூடும் வாரச் சந்தையின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ, 25, 000 வருமானம் கிடைக்கின்றது திருக்கோயில் வருமானத்தைப் பெருக்கும் பொருட்டு ஜவகர் வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் 15—10—1989-ல் 1280 புளியங்கன்றுகள் பயிர் செய்யப் பட்டுள்ளன, தனித்துணை ஆட்சியாளர் [SPECIAL DEPUTY COllECTOR[ தயாரித்து அளித்த நிலங்களை கையகப்படுத்தி சுவாதீனத்துக்குக் கொண்டு வந்த வகையில் தமிழ்நாட்டிலேயே இத்திருக்கோயில் முதலிடம் பெறுகின்றது என்பது பெருமைக் குரியதாகும்.

# திருப்பைஞ்ஞீலி

## திருக்குறுந்தொகை [5-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை அவலமே. 1

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலிஎம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. 2

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருட் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே. 3

ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிடம் ஏத்துபைஞ் ஞீலியுள்
என்றும் மேவி யிருந்த அடிகளே. 4

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனார்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த அடிகளே, 5

---

1. ஞீலி - ஒருவகை வாழை, இங்கு பசியநீலி தலைமரம் ஆதலின் இப்பெயர் பெற்றது.

குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்துநான்
கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலிஎம்
அண்ட வாணன் அடியடைந் துய்ந்தனே. 6

வரிப்பை யாடர வாட்டி மகதரி
உரிப்பை மூடிய வுத்தம னுருறை
திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடினு தாகவே 7

கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாகம் அசைத்த அடிகளே, 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரினன்
வாரு லாமுலை மங்கையோர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலிஎம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே. 9

தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
அரக்கன் பாட அருளும்எம் மானிடம்
இருக்கை ஞீலி யென் பார்க்கிட ரில்லையே, 10

திருச்சிற்றம்பலம்

சுவாமி—நீலகண்டர், ஆரணியவிடங்கர் :
தேவி—விசாலாட்சி, நீணெடுங்கண்ணி,

## திருப்பைஞ்ஞீலி

பண் - காந்தாரபஞ்சமம் [3-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடங் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே 1

மருவிலார் திரிபுரம் எரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலார் அவர்களைத் தெருட்ட லாகுமே. 2

அஞ்சுரும் பணிமலர் அமுதம் மாந்தித்தேன்
பஞ்சுரம் பயிற்றுபைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரந்தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே. 3

கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடலர் ஆணலர் பெண்ணும் அல்லதோர்
ஆடலை யுகந்தஎம் அடிகள் அல்லரே. 4

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனற் சூழல் தாங்கினன்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே. 5

விடையுடைக் கொடிவல னேந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்
துடியிடைக் கலையல்கு லாளொர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுரன் அல்லனே. 6

---

இங்குப் பசியநீல தலமரம் ஆதலின் இப்பெயர் பெற்றது. ஞீலி-ஒருவகை வாழை. ஆரிடம்-முனிவர்கண்ட நூல்: வேதசாகைகள், பாடிலர்-அவற்றால் பேசப்பட்டவர்; பாடப்படும் இல்லை யுடையவர் எனினுமாம். இல்-வாசத்தானம் மருவலார் என்றும் பாடம். பஞ்சுரம்-பழம் பஞ்சுரம்; ஒருபண் கிழியிலார்-கீளுடையை விரும்பியணிவோர்,

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச்செயுந் தன்மை யென்கொலோ, 7

தொத்தின தோள்முடி யுடைய வன்றலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்
முத்தினை முறுவல்செய் தாளொர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே. 8

நீருடைப் போதுறை வானும் மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே, 9

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே, 10

கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புணர் அருமறை ஞானசம் பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின வுலகினி லோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

சுவாமி—நீலகண்டர். ஆரணிய விடங்கர்
தேவி—விசாலாட்சி, நீணெடுங்கண்ணி,

---

பிடகர்-திரிபிடகத்தைத் தம் நூலாக வுடைய புத்தர், உண்பின்-நல் அனுபவத்துக் கிடமான.

## திருவிளையஞ்சீலி

பண்—கொல்லி

திருச்சிற்றம்பலம்

காரு லாவிய நஞ்சை உண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண் (டு)
ஊரெ லாந்திரிந் தென்செய் வீர்பலி
ஓரிடத்திலே கொள்ளும் நீர்
பாரெ லாம்பணிந் தும்மை யேபர
விப்ப ணியும்பைஞ் ஞீலியீர்
ஆர மாவது நாக மோசொலும்
ஆர ணிய விடங்கரே. 1

சிலைத்து நோக்கும்வெள் ளேறு செந்தழல்
வாய பாம்பது மூசெனும்
பலிக்கு நீர்வரும் போது நுங்கையிற்
பாம்பு வேண்டா பிரானிரே
மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும்
மன்னு காரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ்பைஞ் ஞீலியில்
ஆர ணிய விடங்கரே, 2

தூய வர்கண்ணும் வாயும் மேனியும்
துன்ன ஆடை சுடலையில்
பேயொ டாடலைத் தவிரும் நீரொரு
பித்த ரோஎம் பிரானிரே
பாயும் நீர்க்கிடங் கார்கமலமும்
பைந்தண் மாதவி புன்னையும்
ஆய பைம்பொழில் சூழ்பைஞ் ஞீலியில்
ஆர ணிய விடங்கரே. 3

செந்த மிழ்த்திறம் வல்லி ரோசெங்கண்
அரவ முன்கையில் ஆடவே
வந்து நிற்குமி தென்கொ லோபலி
மாற்ற மாட்டோம் இடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும்
ஆர ணிய விடங்கரே. 4

---

2. சிலைத்து—முழங்கி, மூசெனும்—மூசென்ற ஒலியோடு சீறும்.
சந்து-சந்தன மரம்,
3, துன்ன ஆடை-தைத்த ஆடை.

நீறு நுந்திரு மேனி நித்திலம்
　　நீள்நெ டுங்கண்ணி னாளொடும்
கூற ராய்வந்து நிற்றி ராற்கொணர்ந்
　　திடுகி லோம்பலி நடமினோ
பாறு வெண்டலை கையில் ஏந்திப்பைஞ்
　　ஞீலி யேனென்றீர் அடிகள்நீர்
ஆறு தாங்கிய சடைய ரோசொலும்
　　ஆர ணீய விடங்கரே. 5

குரவம் நாறிய குழலி னார்வளை
　　கொள்வ தேதொழில் ஆகிநீர்
இரவும் இம்மனை அறிதி ரேஇங்கே
　　நடந்து போகவும் வல்லிரே
பரவி நாடொறும் பாடு வார்வினை
　　பற்ற றுக்கும்பைஞ் ஞீலியீர்
அரவம் ஆட்டவும் வல்லி ரோசொலும்
　　ஆர ணீய விடங்கரே.

ஏடு லாமலர்க் கொன்றை சூடுதிர்
　　என்பெ லாமணிந் தென்செய்வீர்
காடு நும்பதி ஓடு கையது
　　காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை ஆலுஞ் சோலைப்பைஞ்
　　ஞீலி யேன்என்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லி ரோசொலும்
　　ஆர ணீய விடங்கரே. 7

மத்த மாமலர் கொன்றை வன்னியுங்
　　கங்கை யாளொடு திங்களும்
மொய்த்த வெண்டலை கொக்கி றகொடு
　　வெள்ளெ ருக்கமுஞ் சடைதாம்
பத்தர் சித்தர்கள் பாடி ஆடும்பைஞ்
　　ஞீலி யேன்என்று நிற்றிரால்
அத்தி யீர்உரி போர்த்தி ரோசொலும்
　　ஆர ணீய விடங்கரே. 8

4. மாற்ற மாட்டோம் இடகிலோம்-இடாமல் திரும்பவும் வலியில்லோம்: பிச்சையிடவும் வலியில்லோம்,
5. பாறு-பருந்து,
7. கையது ஓடு, 9. அக்கு-ருத்திராட்சம்; எலும்பு,
10. ஐயம்-பிச்சை.

தக்கை தண்ணுமை தாளம் வீணை
தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்க ரைகுட முழவி னோடிசை
கூடிப் பாடிநின் ருடுவீர்
பக்க மேகுயில் பாடுஞ் சோலைப்பைஞ்
ஞீலி யேன்என்று நிற்றிரால்
அக்கும் ஆமையும் பூண்டி ரோசொலும்
ஆர ணீய விடங்கரே. 9

கையொர் பாம்பரை ஆர்த்தொர் பாம்பு
கழுத்தொர் பாம்பவை பின்புதாழ்
மெய்ய லாம்பொடிக் கொண்டு பூசுதிர்
வேதம் ஓதுதிர் கீதமும்
பைய வேவிடங் காக நின்றுபைஞ்
ஞீலி யேன்என்றிர் அடிகள்நீர்
ஐயம் ஏற்குமி தென்கொ லோசொலும்
ஆர ணீய விடங்கரே. 10

அன்னஞ் சேர்வயல் சூழ்பைஞ் ஞீலியில்
ஆர ணீய விடங்கரை
மின்னும் நுண்ணிடை மங்கை மார்பலர்
வேண்டிக் காதல் மொழிந்தசொல்
மன்னு தொல்புகழ் நாவ லூரன்வன்
றொண்டன் வாய்மொழி பாடல்பத்
துன்னி இன்னிசை பாடு வார்உமை
கேள்வன் சேவடி சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

*சுவாமி: மெய்ஞ்ஞான நீலகண்டசுவர.*
*தேவி: விசாலாட்சியம்மை*

---

வரலாறு : திருப்பைஞ்ஞீலிக்கு வந்த நம்பியாரூரர், கோபுரத்தை இறைஞ்சித் திருக்கோயிலை வலமாக வந்தபோது கங்காளமூர்த்தியைத தரிசித்து மனம் உருகி, அப்பெருமான் பலிக்கு எழுந்தருளிய போது அவர் அழகிய வடிவைக் கண்ட மாதர்கள் மயலடைந்து வினவிய கூற்றாக இப்பதிகத்தைப் பாடியருளினா, [பெரியபுராணம் ஏயர்கோன், 83, 84]

## திருப்பைஞ்ஞீலி

### திருநாவுக்கரசு-கட்டமுது அருந்தல்

### திருத்தொண்டர் புராணம்

அங்கண் இருந்த மறையவர்பால் ஆண்ட அரசும் எழுந்தருள, வெங்கண் விடைவே தியர்நோக்கி ''மிகவும் வழிவந்திளைத்திருந்தீர்!, இங்கென் பாலே பொதிசோறுண்(டு); இதனை உண்டு தண்ணீர் இப், பொங்கு குளத்தில் குடித்திளைப்புப் போக்கிப் போவீர்'' எனப்புகன்றார். 1

நண்ணுந் திருநவுக்கரசர் நம்பர் அருள்என் றறிந்தார் போல், ''உண்ணும்'' என்று திருமறையோர் உரைத்துப் பொதிசோ றளித்தலுமே, எண்ண நினையா தெதிர்வாங்கி இனிதா அமுது செய்தினிய, தண்ணீர் அமுது செய்தருளித் தூய்மை செய்து தளர்வொழிந்தார். 2

எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்த மறையவனார், ''அப்பால் எங்கு நீர்போவ(து)'' என்றார்; அரசும் அவர்க் கெதிரே, செப்பு வார் ''யான் திருப்பைஞ்ஞீ லிக்குப் போவ'' தென்றுரைப்ப, ஒப்பி லாரும் ''யான் அங்குப் போகின் றேன்'' என்றுடன் போந்தார். 3

கூட வந்து மறையவனார் திருப்பைஞ் ஞீலி குறுகியிட வேடம் அவர்முன் மறைத்தலுமே மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம், ''ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை'' எனப் பாடல் புரிந்து விழுந்தெழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார். 4

பைஞ்ஞீ லியினில் அமர்ந்தருளும் பரமர் கோயில் சென் றெய்தி, மைஞ்ஞீ லத்து மணிகண்டர் தம்மை வணங்கி மகிழ் சிறந்து, மெய்ஞ்ஞீர் மையினில் அன்புருக விரும்புந் தமிழ்மாலைகள்பாடிக், கைஞ்ஞீ டியதந் திருத்தொண்டு செய்து காதலுடனிருந்தார். 5

பா-ம்— இளத்த, காட்ட, ஞி. செப்புவரியான்.


நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள் பலமிகவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண் டமிழ்பாடி
மாதொர் பாகர் அருணாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு வண்ணு மலையை நண்ணினர். 6

செங்கண் விடையார் திருவண்ணுமலையைத் தொழுது வலங்கொண்டு துங்க வரையின் மிசையேறித் தெண்டர் தொழும் புக் கெதிர்நிற்கும் அங்கண் அரசைத் தொழுதெழுந்து திளைத்துத் திருநா வுக்கரசர், தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார். 7

அண்ணு மலைமேல் அணி மலையை ஆரா அன்பின் அடியவர்தங், கண்ணுர் அமுதை விண்ணேரைக் காக்கக் கடலில் வந்தெழுந்த, உண்ணு நஞ்சம் உண்டானைக் கும்பிட் டுருகுஞ் சிந்தையுடன், பண்ணுர் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணிசெய்தார். 8

---

பா-ம்—தென்றுரைத்தார். உகந்தார். திருவண்ணாமலையை நாடிப்பதிபலவும். விடையின். அரசைப் பணிந்தெழுந்து. மேலாம் பரிசு சாற்றினர். மணி,



## திருப்பைஞ்ஞீலி
### திருநாவுக்கரசு-கட்டமுது அருந்தல்
### திருத்தொண்டர் புராணம்

*1. திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் செல்லுதல்*

திருநாவுக்கரசர், அங்குநின்றும் நீங்கிக் காவிரி ஆற்றின் இரு கரையிலுள்ள பல சிவத்தலங்களையும் தரிசித்துத் தமிழ் மாலை பலவும் சாத்தி வணங்கிக் கொண்டு திருவானைக்காவை அடைந்து சிலந்திப் பூச்சிக்கு அரச பதவியை அளித்தருளிய பெருமானுடைய திருவடிகளை வணங்கிச் செஞ்சொல் மாலைத் திருப்பதிகங்கள் பலவும் பாடினர். பிறகு, திருவெறும்பியூர் மலையினையும் திருச்சிராப்பள்ளி மலையினையும் திருக்கற்குடி மலையினையும் திருப்பராய்த்துறையினையும் அடைந்து தரிசித்துத் திருப்பதிகம் பாடி வணங்கினார்பிறகு, அருகிலுள்ள பிற தலங்களையும் தொழுது உழவாரப்பணிபுரிந்து திருப்பதிகம் கொண்டு துதித்துத் திருவருளினால் காவிரி யாற்றைக் கடந்து சென்று சிவபெருமான் வீற்றிருக்கும் திருப்பைஞ்ஞீலி நோக்கிச்சென்றார்.

*2, திருப்பைஞ்ஞீலியில் அருகு பொதிசோறு பெறுதல்*

அப்போது திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியிலே பசியினாலும், நீர் வேட்கையினாலும் மிக வருந்தி இளைத்தார்; ஆயினும் மனந்தளராமல் சென்று கொண்டிருந்தார். மணம் மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தில் எழுந்தருளிய சிவபெருமான், தமது தொண்டருடைய வருத்தத்தைப் போக்கியருளத் திருவுளங்கொண்டு அவர் வரும் வழியில் ஒருசோலையையும், குளத்தையும் உண்டாக்கி வழிக் காட்டிப்போகும் கருத்துடன் திருநீறு அணிந்த அந்தணர் கோலத்தில் பொதி சோறு சுமந்து திருநாவுக்கரசர் வரும்வழி எதிரில் வீற்றிருந்தார். திருநாவுக்கரசர் தமக்கு எதிரே வந்தவுடனே சிவபெருமானாகிய அந்தனர் அவரை நோக்கி, ''நீர் வெகுதூரம் நடந்து வந்து மிக இளைத்துப் போனீர். இங்கு என்னிடத்தில் பொதிசோறு இருக்கிறது, அதனை உண்டு

---

1. இதனை, ''சிலந்தியும் ஆனைக் காவில்'' என்ற அப்பர் தேவாரத்தால் அறியலாம்.

2, திருவெறும்பியூர் - இது தேவர்கள் எறும்பு உருவம் கொண்டு பூசித்த காரணத்தால் பெற்றபெயர்: மலைக்கோயில்,

3, திருக்கற்குடி - இஃது உய்யக்கொண்டான்மலை எனவும் வழங்கும். மலைக்கோயில்.

4. திருப்பராய்த்துறை - இங்கு அகன்ற காவிரித்துறை உள்ளது. பராய்-ஒருவகை மரம்.
5. திருப்பைஞ்ஞீலி - ஞீலி - ஒருவகை வாழை. இங்குப் பசிய ஞீலி தலமரம் ஆதலால் இப்பெயர் பெற்றது.

---

இக்குளத்து நீரைப்பருகி உமது இளைப்பைப் போக்கிக் கொண்டு போவீராக'' என்று பரிவுடன், கூறி பொதிசோற்றை எடுத்து அளித்தார். திருநாவுக்கரசர், ''இஃது இறைவன் திருவருள்'' என்று எண்ணி, அதனைப் பெற்று உண்டு, நீர் அருந்தித் தமக்கு ஏற்பட்ட தளர்வினைப் போக்கிக்கொண்டார்.

*திருப்பைஞ்ஞீலியினைத் தரிசித்தல்*

அங்குக் களைப்பு நீங்கி நின்ற திருநாவுக்கரசரை அந்தணர் வடிவுகொண்ட சிவபெருமான் நோக்கி, ''இனி நீர் எங்குச் செல்லுகின்றீர்? '' என்று கேட்டார் திருநாவுக்கரசர், ''நான் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்கின்றேன்'' என்று கூறினர் சிவபெருமானாகிய வந்த அந்தணர், நானும் அங்குத்தான் செல்லுகிறேன்'' என்று கூறி அவருடன் சென்றார். இவ்வாறு உடன் வந்த அந்தணர் திருப்பைஞ்ஞீலியை அடைந்ததும் தாம் கொண்டது வேடத்தை மறைத்தருளினர். உண்மையான தவம் புரிந்த நாவுக்கரசர், ''எம்பெருமானார் அடியேனையும் ஒரு பொருளாகக் கருதியது பெருங்கருணையே ஆகும் ''என்று கூறி நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்தார்; ஆனந்தக் கண்ணீர் பெருகத் திருப்பதிகம் பாடித் துதித்தார்: பிறகு, திருப்பைஞ்ஞீலிப் பதியில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானுடைய திருக்கோயிலை அடைந்து, ஆனந்தக் களிப்புடன் திருப்பதிகங்களைப் பாடி உழவாரப் பணியினை அன்போடு செய்து அங்குச் சிலநாள் தங்கியிருந்தார்.

*திருவண்ணாமலையைத் தரிசித்தல்*

பிறகு, திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலியிலிருந்து புறப்பட்டுச் சிவபெருமாள் எழுந்தருயுள்ள பலமலைகளையும், திருப்பதிகளையும் சென்றடைந்து பேரன்போடு வணங்கி இசை பொருந்திய திருப்பதிகங்களைப் பாடினார்; உமைபாகரின் திருவருளாலே, வடதிசை நோக்கிச் சென்று திருவண்ணாமலையை அடைந்தார்.

---

1. திருவண்ணாமலை-இது அருணாசலம், சோணாசலம், அருணகிரி; அண்ணாமலை எனப்பல பெயர்கள் கொண்டு வழங்கும், அண்ணாமலை - அணுக முடியாத மலை என்பது பொருள். இங்குப்பிரமவிட்டுணுக்கள் முடியும் அடியும் அரிய முடியாது நின்றவரலாறு குறிப்பதாகும்.

# பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம்

## அப்பர் சுவாமிகளுக்கு கட்டமுது அருளி வரலாறு

மற்றப் பதிகள் முதலான மருங்குள் எனவும் கைதொழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள் செய்து பதிகங் கொடுபோற்றி
உற்ற அருளால் காவிரியை ஏறி ஒன்னார் புரிமெரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ லியினைச் சென்று சேர்கின்றார்.

''வழி போம் பொழுது மிக இளைந்து வருத்தம் உறநீர் வேட்கையொடு
அழிவாம் பசிவந் தணைந்திடவும் அதற்குச் சித்தம் அலையாதே
மொழிவேந் தரும்முன் எழுந்தருள முருகார் சோலைப் பைஞ்ஞீலி
விழிக்கேந்திய நெற்றியினார் தம் தொண்டர் வருத்தம் மீட்பாராய்

காவும் குளமும் முன் சமைத்துக் காட்டி வழிபோங் கருத்தினால்
மேவும் திருநீற்றந் தணராய் விரும்பும் பொதிசோறுங் கொண்டு
நாவின் தனிமன் னவர்க்கெதிரே நண்ணியிருந்தார் வினைஞரின் மேய்
தாவும் புள்ளும் மண்விழிக்கும் தனிஎனமுங்காண் பரியவர் தாம்.

அங்கண் இருந்த மறையவர் பால் ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைவேதியர் நோக்கி மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்!
இங்கென் பாலே பொதி சோறுண்டு இதனை உண்டு தண்ணீர் இப்
இப்பொங்கு குளத்தில் குடித்திளைப்புப் போக்கிப் போவீர்,,எனப்புகன்றார்

நண்ணுந் திருநாவுக்கரசர் நம்பர் அருள் என்றறிந்தார் போல்
உண்ணும் என்று திருமறையோர் உரைத்துப் பொதி சோறளித்தலுமே
எண்ண நினையா தெதிர்வாங்கி இனிதா அமுது செய்தினிய
தண்ணீர் அமுது செய்தருளித் தூய்மை செய்து தளர்வொழிந்தார்

எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்தமறையவனார்
.:அப்பால் எங்கு நீர் போவ(து)என்றார் அரசும் அவர்க்கெதிரே
செப்புவார்;'யான் திருப்பைஞ்ஞீலிக்குப் போவ;;தென்றுரைப்ப
ஒப்பிலாரும்;?யான் அஙகுப் போகின்றேன்;;என்றுடன் போந்தார்

கூட வந்து மறையவனார் திருப்பைஞ்ஞீலி குறுகிட
வேடம் அளர்முன் மறைந்தலுமே மெய்ம்மைத் தலத்து மேலவர்தாம்
''ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை'' எ
பாடல் புரிந்து விழுந்தெழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார்

பைஞ்ஞீலியினில் அமர்ந்தருளும் பரமர் கோயில் சென்றெய்தி
மைஞ்சி லத்து மணி கண்டர் தம்மை வணங்கி மகிழ்சிறந்து
மைஞ்சீர் மெயினில் அன்புருக விரும்பும் தமிழ்மாலைகள் பாடிக்
கைஞ்சீ யடிதம் திருத்தொண்டு செய்து காதலுடனிருந்தார்''

சிவபெருமான் அப்பருக்குக் கட்டமுது அளித்த காட்சி



Q23:38.24 N92

220648